நாள்.05.01.2024

**அசல் வழக்கு எண். 109/2022**

**<u>வா.சா.2</u> - பிரதிவாதிகள் <u>தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

எனது நிருபண வாக்குமூலத்தில் எனக்கு சொந்தமான டிராக்டர் உள்ளதாக சொல்லியுள்ளதற்கு அந்த வண்டியின் ஆர்சி புத்தகத்தை தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. அசல் வழக்கை யார் தாக்கல் செய்துள்ளார் என்றால் வின்செண்ட் சவரியார். வழக்கு சொத்தின் சர்வே எண் தெரியுமா என்றால் 431/3 பி. அதன் விஸ்திரணம் தெரியுமா என்றால் 50 குழி. வழக்கு சொத்தின் நான்கெல்லை தெரியுமா என்றால் தெரியும். கிழக்கில் மைக்கேல் -க்கு சொந்தமான தென்னந்தோப்பு உள்ளது, மேற்கில் வின்செண்ட் சவரியார்-க்கு சொந்தமான தென்னந்தோப்பு உள்ளது, வடக்கு, தெற்கு கிறிஸ்டின் பால்ராஜ்-க்கு சொந்தமான தென்னந்தோப்பு உள்ளது. நான் வயலுக்கு டிராக்டர் மூலமாக உழவுக்கு சென்றால் அந்த வயலின் சர்வே எண்ணை கேட்டு தான் உழவு செய்வேனா என்றால் இல்லை. வாதிக்கு சொந்தமான சொத்திற்கு உண்டான சர்வே எண் மற்றும் நான்கெல்லைகள் குறித்து வாதி சொல்லி தான் எனக்கு தெரியும். வாதி சொல்லிதான் தாவா சொத்தின் சர்வே எண் என்று எனக்கு தெரியும் என்றும், அதற்கு உண்டான சர்வே எண்கள் பற்றி நேரடியாக தெரியாது. தாவா சொத்து பிரதிவாதியின் அனுபவத்தில் உள்ளது என்றும், வாதியின் அனுபவத்தில் உள்ளதாக பொய்யாக சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை இல்லை</u>**

*Taken down by the typist to my dictation*
*in open Court read over to the*
*witness admitted and acknowledged*
*by him/her to be Correct.*

Sd/- M. Ravichandran,B.A.,B.L.,

District Munsif, Pattukkottai.